# ஆ.பழநியின் 'அனிச்ச அடி' நாடகத்தில் பண்பாட்டுக் கூறுகள்

**ரா.ரம்யா & முனைவர். ப.சு.செல்வமீனா**

**தமிழ் உயராய்வு மையம், அழகப்பா அரசு கலைக் கல்லூரி,**

**காரைக்குடி – 630 003**

**8**

**ஆய்வுச் சுருக்கம்**

விலங்குகளில் இருந்து உயர்ந்த விலங்கு மனிதனாவான். மனிதன் வாழ்வில் உயர்வடையப் பயன்படும் செயல்பாடுகள் அனைத்தும் பண்பாடு எனப்படும். அன்பு, அருள், வாய்மை, தூய்மை, ஒப்புரவு, கண்ணோட்டம், ஈகை, நாணம் முதலிய பண்புகள் அனைத்தும் மனிதன் பிறரோடு கொள்ளும் உறவினுக்கு அடிப்படையானவைகளேயாகும். மனிதனுடைய அறிவும், அனுபவமும் மேற்சொன்ன பண்புகளாக மட்டுமின்றி உணவு, உடை, உறையுள் போன்ற பிற பொருள்களின் வழியும் வளர்ச்சியடைகின்றது. அத்தகைய பண்பாட்டுக் கூறுகளை எடுத்துக்காட்டி எழுதுவதில் வல்லவரான ஆ.பழநியின் அனிச்சஅடி என்னும் செய்யுள் நாடகத்தில் இடம்பெறும் பண்பாட்டுக் கூறுகளை விளக்குவதே இக்கட்டுரையின் சுருக்கமாக அமைகின்றது.

**கலைச்சொற்கள்**

பண்பாடு – விருந்தோம்பல் – வெள்ளணி நாள் விழா – நடுகல் - செவியறிவுறூஉ

**முன்னுரை**

"தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அவர்க்கோர் குணமுண்டு" என்று அடையாளப்படுத்தினார் நாமக்கல் கவிஞர். வேறு எந்த மொழிக்கும் இல்லாத பெருமை தமிழுக்கும் தமிழருக்கும் உண்டு. மனித இனம் எப்படி வாழ வேண்டும் என்பதை விட எப்படி வாழக்கூடாது என்று வாழ்வியலைக் கற்றுக் கொடுத்தது தமிழரின் பண்பாடு ஆகும். பண்பாடு மனிதர்களை பிற உயிரினங்களிடமிருந்து பிரித்து காட்டுகின்றது. காலம் காலமாக மனிதனால் ஆராய்ந்து கற்று தெளிந்தவை ஒருவரிடமிருந்து மற்றவரிடம் சென்றடையும்போது அவனது பண்பாடும் வெளிப்படுகிறது. அவ்வகையில் தமிழில் தோன்றிய இலக்கியங்கள் யாவும் வரலாற்றை ஒட்டிய பழ மரபுக் கதைகளையே தம் அடிக்கருத்தாக கொண்டு விளங்குகின்றன. இத்தகைய இலக்கியங்கள் அறம், ஒழுக்கம், கல்வி, போர், விருந்தோம்பல், இன்னாசெய்யாமை போன்ற பண்பாட்டுக் கூறுகளைப் படம்பிடித்துக் காட்டுகின்றன. ஆ.பழநி இயற்றிய அனிச்ச அடி நாடகம் தமிழ் மன்னர்களுள் ஒருவனாகிய நன்னனை பற்றிய செய்திகளை வைத்துப் பின்னப்பட்டதாகும். இந்நாடகம் மண்ணில் பிறந்த ஒவ்வொருக்கும் ஒரு கடமையுண்டு என்பதைப் புலப்படுத்துகின்றது. மனித எண்ணங்கள் பண்பாடாக வெளிப்படுகின்றது. அந்த வகையில் அனிச்ச அடி நாடகத்தில் காணலாகும். பண்பாட்டுக் கூறுகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**அனிச்ச அடி – கதைச்சுருக்கம்**

சேர நாட்டுப் படைத்தலைவன் ஆய் எயினன் மகள் சுரும்பார் குழலி, துளுநாட்டு மன்னர் நன்னனின் காவல் மரத்தில் விளைந்த மாங்கனியைத் தின்றதனால் நன்னால் கொலைத் தண்டனைக்கு

ஆளாகிக் கொல்லப்படுகிறாள். குழலியின் கணவனான அருளாழி பல்வேறு துன்பத்திற்கு ஆளாகி, இறுதியில் நன்னனைப் பழிவாங்கியே தீருவேன் என சூளுரைக்கின்றான். இதற்கு உறுதுணையாக கண்ணியன் கீரன், அனிச்ச அடி, சேர மன்னன் நார்முடிச்சேரல், பரணர் போன்றோர் செயல்படுகின்றனர். இந்நிலையில் தன் மகளை கொலைத் தண்டனைக்கு ஆளாக்கிய பகைவரை எதிர்த்து போரிடச் சென்ற எயினனும் போரிட்டு இறக்க, அச்செய்திக் கேட்ட அணிவளையும் தன் உயிரை மாய்த்துக் கொள்கின்றான்.

இந்நிலையில் கோட்புலி தன்னை மணந்து கொள்ளும்படி அனிச்ச அடியை வற்புறுத்த அவள் மறுத்து குறும்பர் குலத்தினை இழிவாகப் பேசுகிறாள். இதனால் கோட்புலி சினந்து அனிச்ச அடியின் அடி கழுத்தில் குறுவாளால் எறிய அனிச்ச அடி நோய்வாய்ப்படுகிறாள். இறுதியில், அருளாழி போருக்குச் சென்று வெற்றியடைந்த செய்தியை அறிந்த அனிச்ச அடி உரத்தக் குரலில் அருளாழி வாழ்க எனக் கூவ, கழுத்திலிருந்து இரத்தம் பீறிட அவள் மூச்சானது அடங்குகின்றது.

**பண்பாடு – விளக்கம்**

பண்பாடு என்ற சொல் ஆங்கிலத்தில் "Culture" என்னும் சொல்லிற்கு நேராகவே ஆளப்படுகிறது. பண்பாடு என்பது மக்கள் அனைவரும் கூட்டமாக சேர்ந்து செயல்படும் போது உண்டாகும் நடைமுறைகளின் சேர்மமாகும். "குறிப்பிட்ட இடத்து மக்களின் பழக் வழக்கங்களும், நம்பிக்கைகளும், கதைகளும் சிந்தனையை வெளிப்படுத்தும் முறைகளும், மக்களின் Culture"[1] என்றெல்லாம் நர்மதாவின் தமிழ் அகராதி பண்பாடு பற்றிக் குறிப்பிடுகின்றது.

மேலும் "பண்பாடு என்ற சொல் வழக்கத்திற்கு வருவதற்கு முன் இச்சொல் பொருளை உணர்த்துவதாக சால்பு என்ற சொல் தமிழில் பயன்பட்டு வந்துள்ளது"[2] என்றும், "ஒருவன் தன் குணநலன்களை நிரப்புவதிலும், தன்னை சூழ்ந்த நிலை சமுதாய நலன்களையும் பேணுவதிலும் பேரவாக் கொண்டிருக்கும் நிலை பண்பாடாகும் என்பர் மாத்யூஆர்னால்டு"[3] என்றெல்லாம் பண்பாட்டிற்கான விளக்கங்கள் அளிக்கப்படுகின்றன. தனிநாயகம் அடிகளார் "பண்பாடு என்றால் ஓர் இனத்தாரின் கொள்கைகள், கோட்பாடுகள், நோக்கங்கள், சமூகச் சட்டங்கள், சமயங்கள் வழிபாட்டு முறைகள், களவொழுக்கம், கற்பொழுக்கம், அகத்திணை, புறத்திணை மரபுகள், இலக்கிய மரபுகள், அரசியலமைப்புகள், ஆடை அணிகலன்கள், திருவிழாக்கள், உணவு பொழுதுபோக்கு விளையாட்டுகள் இவற்றையெல்லாம் குறிக்கும்"[4] என்கிறார்.

**அனிச்ச அடி நாடகத்தில் பண்பாட்டுக் கூறுகள்**

**காதல்**

இலக்கியங்களில் மனிதனின் வாழ்க்கையை களவு, கற்பு என இருவகையாகக் காணலாம். மனிதனானவன் உலகில் தனித்து இருக்க முடியாத சூழலில் பிறரை சார்ந்து வாழ வேண்டிய நிலை ஏற்பட்டு, அங்கு அன்பானது தோன்றுகிறது. அத்தகைய அன்பு காதலாகின்றது. மேலும் காதலென்று வெறும் உடற்காமம் அன்று, அதனையும் கடந்து நிற்பது; மனத்தளவில் உயர்ந்து நிற்பது; மனைவியின் உடலழகு வற்றி நரை மூதாட்டியாக ஆனபோதும் தலைநாள் கொண்ட உழுவலன்போடு அவளைப் போற்றுவது கணவனின் கடமையாகும் என குறிப்பிடும் நற்றினையை காட்டிலும் அருளாழியானவன்

குழலியின் மீது கொண்ட காதல் உயர்ந்ததாகும்.

**“ஊனில், உயிரில், உணர்வில், நினைவில்**
**பாலில் நெய்யாகப் படர்ந்தவள்”**

(அனி. அடி: அ-1:க-5 : பா-37-38)

எனப் பகைவரின் சூழ்நிலையால் குழலியை இழந்த அருளாழி அழுது புலம்புவதன் வழி அவனின் காதல் பண்பானது வெளிப்படுகின்றது.

**கற்பு**

பண்டைய சமுதாயம் பெண்ணை ஒரு வரையறைக்குள் வைத்திருந்தது. அது கற்பு என்னும் வரைக்கோட்டுக்குள் வைத்துப் பழக்கப்படுத்தியது. “மணந்தவனோடு தமது வாழ்க்கையை இணைத்துக் கொள்ளும் பெண்கள், அவன் இறந்த பின்னால் அவளின் வாழ்க்கையும் இறந்து விட வேண்டும் என்ற கட்டுப்பாட்டை பெண்களுக்கு வித்திருந்தனர்”[5] என்பதற்கேற்பவே இந்நாடகத்திலும் மகளை இழந்த எயினன் பகைவரைப் பழிதீர்க்கப் போர்க்குச் சென்ற போது உயிர்துரக்க, இறப்பினைக் கேட்ட அளவிலே அணிவவளை உயிர் நீங்கியதை,

**“ . . . . . . நிகழ்வது கேட்டுப்**
**பனையின் வீழ்ந்தவற் கரிமித்தாலென**
**அணிவளை யாட்டி ஆவி ஒடுங்குகின்றார்”**

(அனி. அடி: அ-2: க-4 : பா-119-121)

காதால் கேட்டதன் நொடியே தன் உயிரைத் துறந்த அணிவளையின் கற்புடைமை பேசுதற்குரியதாகும்.

**விருந்தோம்பல்**

தமிழரின் சிறந்த பண்பாகத் திகழ்வது விருந்தோம்பல் ஆகும். இதனைச் சிறந்த கலையாகக் கையாண்டுள்ளனர். விருந்தோம்பல் என்பது வீட்டிற்கு வரும் உறவினர்களை மட்டுமல்லாது முகம் தெரியாத யாராக இருந்தாலும் அவர்களை அன்போடு உபசரித்து முகம் மலர உணவளித்து உள்ளன்போடு வழியனுப்பும் வாழ்வியலைக் கற்று தருகிறது. தொல்காப்பியர் பெண்ணின் இலக்கணம் கூறுகையில் விருந்தோம்பல் பண்பாட்டை சேர்த்துக் கூறுவதோடு “விருந்தே தானும் புதுவது கிளந்த யாப்பின் மேற்றே”[6] என்பார். திருவள்ளுவரோ விருந்தேதாம்பலுக்கெனத் தனி அதிகாரத்தை வகுத்து, முகமலர்ந்து விருந்தோம்புவன் இல்லத்தில் திருமகள் தங்குவாள் என விருந்தோம்பல் அறத்தைச் சுட்டுகின்றனார். நறவுப் பட்டினத்தில் பிறந்த நாள் விழா காணச்சென்ற சுரும்பார் குழலி அங்கு விருந்தோம்பல் செய்யும் பெண்களில் இயல்பினைக் கண்டு வியக்கின்றாள், இதனை

**“வண்ணமும் திருந்திய வடிவமே தூய**
**எண்ணமும் உடையார் இலங்கிழை மகளிர்;**
**எம்மொழி பேசினும் எதிர் கொண்டினியாவம்**
**செம்மொழி உணவொடு சேர்த்துண் பிக்கும்**
**இவரரே விருந்தின் இயல்புணர் தோரே!”**

(அனி. அடி: அ-1:க-2 : பா-27-31)

என்னும் பாடலடிகள் சுட்டுகின்றன.

**வெள்ளணிநாள் விழா**

விழாவானது ஓரிடத்தில் வாழும் மக்களின் நாகரிகம், கலாச்சாரம், பாரம்பரியம் ஆகியவற்றை பிரதிபலிக்கக்கூடியதாகும். மன்னர்கள் பிறந்தநாள் விழாவினை வெள்ளணி நாள் விழா என்றும், இவ்விழாவினை ஆண்டுத்தோறும் மிகச்சிறப்பாகவும் கொண்டாடி மகிழ்ந்துள்ளனர். இச்செய்தியைத் தொல்காப்பியத்தில்,

**“பிறந்த நாள்வயின் பெருமங்கலமும்”[7]**

என்பதன் வழி அறியமுடிகிறது. “சிறந்த சீர்த்தி மண்ணுமங்கலம் என்பது மன்னனின் பிறந்த நாள் விழாவாகும். இவ்விழா நாளில் சிறையிலிருந்தோர் விடுதலை செய்ய பட்டமையைச் சிலப்பதிகாராம் குறிப்பிடுகிறது”[8] என தட்சிணாமூர்த்தி சுட்டுகின்றார். நன்னனின் வெள்ளணிநாள் விழா நிகழ்ச்சிகளை அருளாழியும் சுரும்பார் குழலியும் கண்டு களிக்கின்றனர். அங்கு மக்கள் கூட்டம் வெள்ளம் போல் கடற்கரையிலும் நகரிலும் திரண்டுள்ளன. அவ்விழாவிற்காக நகரம் அலங்கரிக்கப்பட்டதனை

**“வாழையின் குருத்தும், தாழையின் மடலும்**
**மாழையின் வண்ணம் காட்டியெம் மருட்டும்**
**தெங்கின் குலையும் நுங்கின் தொகுதியும்**
**தொங்குத லில்லாதத் தூண்யாண்டு மில்லை,”**

(அனி. அடி: அ-1:க-2 : பா-11-14)

என்னும் பாடலடிகள் சுட்டுகின்றன.

**நடுகல்**

போரில் இறந்துபட்ட வீரர்கட்டுக் கல்நட்டு அவர்களைக் கடவுளாக வழிபட்ட மரபினை இலக்கியம் பேசுகிறது. இந்நடுகல்லில் இறந்த வீரனின் பெயரும் பீடும் எழுதி, தெய்வமாக வழிபட்டு வந்ததைத் தொல்காப்பியம் சுட்டுகின்றது.

அகநானூறு,

**“நடுகற்பீலி சூட்டித் துடிப்படுத்துத்**
**தோப்பிக் கள்ளொடு துரூஉப்பலி கொடுக்கும்” (அகம் – 35)**

என்று நடுகல் வழிபாட்டு முறையைக் கூறுகின்றது. எதிரியை அழிக்கச் சென்ற எயினன் போரிட்டு வாளுக்கு இரையாகி நடுகல்லாக நின்ற செய்தியை,

**“ . . . . . . . வஞ்சகன் மிஞிலியைத்**
**தன்வாட் படுத்தத் தடந்தோர் கொட்டிப்**
**புன்னாட் டரசின் போர்த்துணையாகிச்**
**சென்றான் எயினன்; செருக்கள முழுமையும்**
**நின்றான்; சுழன்றான்; நெடுவாட் குணவாகக்**
**கொன்றான் பலரைக் குறித்தது கொளானாய்**

**நின்றான் நடுகல்"**

(அனி. அடி: அ-2:க-4 : பா-13-119)

என்ற அடிகள் மூலம் ஆசிரியர் புலப்படுத்துகின்றார்.

**கடமையே கண்**

கடமை என்பது பொதுவாக அல்லது குறிப்பிட்ட நிலையில் ஏற்படக் கூடிய ஒரு நிகழ்வாகும். ஒருவரை ஒருவர் மதிக்கின்ற பண்பாட்டில் கடமையானது தோன்றுகின்றது. புறநானூறு தாய் ஒருத்திக்கு மகனைப் பெற்றுப் பேணிக் காத்தல் என் தலையாய கடமை, அவனைச் சான்றோனாக விளங்கச் செய்தல் அவன் தந்தையின் கடமை, போர் புரிய வேலை வடித்துக் கொடுத்தல் ஊர்க் கொல்லனின் கடமை, நன்னடத்தை உள்ளவனாக விளங்கச் செய்தல் வேந்தனின் கடமை, வாளைச் சுழற்றிப் போர்க்களத்தில் பகைவேந்தன் யானையை வீழ்த்திவிட்டு வெற்றியுடன் திரும்புதல் மகானாகிய காளையின் கடமையென ஒவ்வொரு கடமையை வகைப்படுத்துகிறது. அருளாழிக்கு அனிச்ச அடி மீது காதல் தோன்றியும் அதனைத் தன் மனதினுள்ளே புதைத்துக் கொண்டு தன் மனைவிக்கு கொடுமை இழைத்த கொடியோரை அழித்தலையே கடமையாகக் கொண்டிருந்ததை

"**ஆர்வம் விடாஅ தரும்போ ரியற்றிச்**
**சோர்வினால் மிஞிலியின் சுடர்வாட் கையிலோர்**
**நடுக்கம் கண்ட நாயகம் அருளன்**
**முடுக்கினன் விரைவை முன்னினும் இரட்டி;**
**வேலும் தோலும் வீழ்ந்தது கண்டிலம்**
**போழும் நெடுவேல் புக்கதே கண்டனம்;** (அனி. அடி: அ-5:க-4 : பா-77-82)

என்ற போர்க்கள நிகழ்வுகள் வழி காதலைவிடக் கடமையே பெரிதென அறியமுடிகின்றது.

**செவியறிவுறூஉ**

எங்கெல்லாம் துன்பம் உள்ளதோ அங்கெல்லாம் அறிவுடையோர் தம் கடமையாற்றத் தயங்கமாட்டார்கள். அவ்வகையில் "மன்னர்கள் தவறாக நடந்த போதும், அறநெறிகளை எடுத்துக் கூறி அரசியல் சிறந்து விளங்க உதவிய அறிஞர்கள் சங்கப் புலவர்கள்"[9] என தமிழர் நாகரிமும் பண்பாடும் என்னும் நூல் சுட்டுகின்றது. மோசிகீரனார் நன்னன் தவறிழைத்த போது அதனைத் தட்டிக் கேட்கத்தயங்கவில்லை.

**"இயற்றிய பிழைக்கே யாவரும் ஒறுப்பர்**
**வயிற்றிடைக் கருவும் வஞ்சனை புரிந்தோ?**
**பொய்மையின் தோற்றப் பொலிவினால் மயங்கி**
**மெய்ம்மையைக் காலிடை மிதித்துத் துவைத்துள்ளீர்!"**

(அனி. அடி: அ-1:க-4 : பா-228-231)

என நிறைமாதக் கர்ப்பிணிக்கு நன்னன் மரண தண்டனை விதித்த போது அவனிடம் குற்றித்தினை எடுத்துரைக்கும் மோசிகீரனாரின் பண்பினை அறியமுடிகிறது. அரசனே ஆகிலும் தவறிழைப்பவரைத் தட்டிக் கேட்கும் துணிவு, அறிவுறுத்தும் பாங்கு புலவர்களுகுண்டு என்பதை உணர முடிகிறது.

**தொகுப்புரை**

தமிழர் பண்பாடு பல காலமாக பேணப்பட்ட, திருத்தப்பட்ட மேம்படுத்தப்பட்ட அம்சங்களைக் குறித்து நின்றாலும், அது தொடர் மாற்றத்திற்கு உட்பட்டு நிற்கும் ஒரு இயங்கியல் பண்பாடாகும். அவ்வகையில் **"புலவர் ஆ.பழநியின் அனிச்ச அடி நாடகத்தில் பண்பாட்டு கூறுகள்"** என்னும் ஆய்வுக் கட்டுரையின் வழி,

- மனிதர்களிடம் தோன்றக் கூடிய அன்பானது காதலாக வளர்ந்து, அது உயர்ந்த பண்பாடாக மாறுவதை அருளாழி வழியும்,
- பெண்களுக்கென விதிக்கப்பட்ட கற்பு என்னும் கோட்பாட்டின் வழி அணிவளை திகழ்வதையும்,
- தமிழருக்கே உரிய தலையாய பண்பாடாகிய விருந்தோம்பல் நன்னனின் பிறந்த நாள் விழாவில் திகழ்வதையும்,
- மன்னனின் வெள்ளணி நாள் விழாவினை ஆண்டு தோறும் சிறப்பாக கொண்டாடியதையும்,
- போரில் இறந்த வீரர்களுக்கு நடுகல் இட்ட செய்தியையும்,
- இத்தகைய காதலை விட கடமையே பெரிதென கொள்ளும் தமிழரின் பண்பாட்டினையும்,
- மன்னன் தவறிழைக்கும் பொழுது அவர்களுக்கு அறிவுரை வழங்குவது புலவர்களின் பண்பாடாக திகழ்வதையும் அறிய முடிகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. நர்மதாவின் தமிழ் அகராதி, ப.570.
2. ம.இரகுநாதன், பண்டைத்தமிழர் பண்பாட்டு தடங்கள், ப.1.
3. அ.தட்சிணா மூர்த்தி, தமிழர் நாகரிகமும், பண்பாடும், ப.6.
4. தனிநாயகம் அடிகள், தமிழர் பண்பாடும் அதன் சிறப்பு இயல்புகளும், ப.18.
5. க.மோகன், காப்பியமும், தமிழன் வாழ்வியலும், ப.64.
6. தொல்காப்பியம், செய்யுளியல், நூ.231.
7. தொல்காப்பியம், பொருளியல் நூ.36:8
8. அ.தட்சிணாமூர்த்தி, தமிழர் நாகரிகம் பண்பாடும், ப.224.
9. மேலது, ப.232.

துணைநூற்பட்டியல்

1. இரகுநாதன்.ம - பண்டைத் தமிழர் பண்பாட்டு தடங்கள்
SSR பிறின்டேஸ்,
72, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

2. இளம்பூரணார் (உ.ஆ) - தொல்காப்பியம்
திருநெல்வேலித் தென்னிந்திய
சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம்,
சென்னை – 1, 1969

3. தட்சிணாமூர்த்தி - தமிழர் நாகரிகம் பண்பாடு,
யாழ் வெளியீடு,
சென்னை – 40

4. தனிநாயம் அடிகளார் - தமிழர் பண்பாடுகளும் அதன் சிறப்பு இயல்புகளும்,
தந்தை செல்வா அறங்காவலர் குழு,
யாழ்ப்பாணம் – 1980

5. மோகன்.க - காப்பியமும் தமிழன் வாழ்வியலும்
பூச்சரம் பதிப்பகம்,
கல்லூரிச்சாலை, காரைக்குடி

6. . . . . . . - நர்மதாவின் தமிழ் அகராதி
நர்மதா பதிப்பகம்,
10 நானாதெரு, சென்னை – 600 017.